**ஆகஸ்ட் – 27**

# TNPSC துளிகள்

- ஹங்கேரியின் நாகிசனிசாவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான கனிசா ஓபன் செஸ் தொடரில் இந்தியாவின் 19 வயதான கிராண்ட்மாஸ்டர் பிரனேஷ் M வெற்றி பெற்றார்.
- தேசியப் பாதுகாப்புப் படையானது (NSG) ஹரியானாவின் மானேசரில் உள்ள தனது பயிற்சி அகாடமியில் She Who Dares, Leads என்ற கருத்துருவின் கீழ் இந்தியாவின் முதல் மகளிர் கமாண்டோ மாற்றுப் படிப்பைத் (MCCC) தொடங்கியது.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21 அன்று வங்கதேசத்தின் 23வது அதிபராக மிர்சா ஃபக்ருல் இஸ்லாம் ஆலம்கீர் பதவியேற்றார்.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 முதல் நான்கு ஆண்டுகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) மத்தியக் குழுவில் பகுதிநேர அதிகாரப்பூர்வமற்ற இயக்குநராக சோம்நாத் ஸ்ரீதர பணிக்கர் நியமிக்கப்பட்டுள்ளார், மேலும் ஆனந்த் கோபால் மஹிந்திரா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.
- கூகுள் தனது 2026 ஆம் ஆண்டு பள்ளிக்குத் திரும்புதல் (Back to School 2026) பிரச்சாரத்தை கூகுள் தேடல், ஜெமினி மற்றும் கூகுள் வகுப்பறை முழுவதும் செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் கற்றல் கருவிகளுடன் அறிமுகப்படுத்தியது.
    - அமெரிக்காவிற்கு வெளியே தகுதியுள்ள கல்லூரி மாணவர்கள் அதிக ஜெமினி வரம்புகள் மற்றும் 400 GB சேமிப்பகத்துடன் 12 மாதங்களுக்கு இலவச கூகுள் AI பிளஸைப் பெறலாம்.
- ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) விண்வெளி வீராங்கனை சோஃபி அடெனோட் விண்வெளி நடைப்பயணத்தை மேற்கொண்ட முதல் பிரெஞ்சுப் பெண்மணி ஆனார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பரந்தூர் விமான நிலையத் திட்டம்




- முன்மொழியப்பட்ட பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்படும் என்று

தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்தார்.

- தொழில்நுட்ப சாத்தியக்கூறுகள் மற்றும் விவசாய நிலங்கள், மனித குடியிருப்புகளில் ஏற்படும் தாக்கத்தை ஆய்வு செய்த பின்னர், சென்னையின் இரண்டாவது விமான நிலையத்திற்கான மாற்று இடங்களை மாநில அரசு அடையாளம் காணும்.
- மீனம்பாக்கத்தில் உள்ள தற்போதைய சென்னை விமான நிலையத்தில் இந்திய விமான நிலைய ஆணையத்தின் (AAI) ஒத்துழைப்புடன் அணுகு சாலை மற்றும் மேம்பாலத்துடன் புதிய முனையம் 5 உருவாக்கப்படும்.
- சென்னை விமான நிலையம் தற்போது ஆண்டுக்கு சுமார் 30 மில்லியன் பயணிகளை கையாளுகிறது; முனையம் 3-க்கு பிறகு 35 மில்லியனாகவும், முனையம் 5-க்கு பிறகு 55 மில்லியனாகவும் திறன் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- பரந்தூர் திட்டம் முக்கியமாக விவசாய நிலங்கள் மற்றும் மனித குடியிருப்புகளில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தின் காரணமாக கைவிடப்பட்டது.

## தமிழ்நாடு அறிவு (TN-ARIVU) பாடத்திட்டம்





- தமிழ்நாடு 2027-28 ஆம் கல்வியாண்டு முதல் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுடன் கூடிய TN-ARIVU (பகுப்பாய்வுச் சிந்தனை, பகுத்தறிவு, புத்தாக்கம், புதிய முயற்சிகள் மற்றும் தொழில்முனைவு, திறன் மேம்பாடு) பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தும்.
- இப்பாடத்திட்டத்தில் 1 முதல் 5 வரையிலான வகுப்புகளுக்கு 'அறிவு ஃபவுண்டேஷன்', 6 முதல் 8 வரையிலான வகுப்புகளுக்கு 'அறிவு டிஸ்கவரி' மற்றும் 9 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கு 'அறிவு எட்ஜ்' ஆகியவை இருக்கும்.
- பள்ளிக் கல்வித்துறை முக்கியமாக செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் விளையாட்டுகளில் கவனம் செலுத்தி, மொத்தம் ₹44,527 கோடி மதிப்பீட்டில் 31 முன்னெடுப்புகளைச் செயல்படுத்தும்.
- மதிச்சுடர் திட்டம் 2026-27 ஆம் ஆண்டில் 6 முதல் 12 வரையிலான வகுப்புகளுக்கு

செயல்படுத்தப்படும், அதே சமயம் வெற்றிப்பாதை திட்டமானது 172 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளுக்கு பயிற்சி, மாதிரித் தேர்வுகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கும்.

- PLAY (உடல் செயல்பாடு, கற்றல், கலை மற்றும் இளைஞர்கள்) முயற்சியின் கீழ், மாணவர்கள் விளையாட்டு, கலை மற்றும் பிற இணைப் பாடச் செயல்பாடுகளுக்கு தினசரி நேரத்தைப் பெறுவார்கள்; 50 அரசுப் பள்ளிகள் ஸ்போர்ட்ஸ் பிளஸ் பள்ளிகளாக உருவாக்கப்படும்.

## ஈட்டி மரங்கள் மீது உயர் நீதிமன்றம்

- தொடர்புடைய வழக்கின் தீர்ப்பு வரும் வரை தனியார் நிலங்களில் ஈட்டி (ரோஸ்வுட்) மரங்களை வெட்டுவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ அனுமதி வழங்குவதை சென்னை உயர் நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.
- 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஈட்டி மரங்கள் (பாதுகாப்பு) சட்டம் மற்றும் அதன் 1995 ஆம் ஆண்டு விதிகளை ரத்து செய்வதற்கான முன்மொழிவை ஏற்றுக்கொண்ட அரசாணை எண் 88-ஐ நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.
- ஈட்டி மரம் தென்னிந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு அரிய வகை மரம் மற்றும் இயற்கையாகவே மீண்டும் வளர்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாதவாறு உள்ளதால், சட்டத்தை ரத்து செய்வதற்கான பரிந்துரை தர்க்கத்திற்கு முரணானது என்று நீதிமன்றம் கூறியது.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் 9 தேதியிட்ட 1994 ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டு விதிகளை ரத்து செய்வது தொடர்பான அரசாணைக்கு இந்த வழக்கு சவால் விடுக்கிறது.
- நீதிப்பேராணை மனு முடித்து வைக்கப்படும் வரை, தனியார் நிலங்களில் இருந்து ஈட்டி மரங்களை வெட்டவோ அல்லது அகற்றவோ அதிகாரிகள் அனுமதி வழங்க முடியாது.





## ஆசிரியர் தகுதித் தேர்வு (TET) விதியிலிருந்து விலக்கு

- 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதிக்கு முன் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்விலிருந்து (TET) விலக்கு கோரும் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றியது.
- இத்தீர்மானம் 2009 ஆம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி

உரிமைச் சட்டத்தின் பிரிவு 23-இல் திருத்தம் செய்யக் கோருகிறது.

- 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 முதல் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வை (TET) தேசிய ஆசிரியர் கல்வி சபை (NCTE) கட்டாயமாக்கியது.
- 15 முதல் 20 ஆண்டுகள் பணியாற்றிய சுமார் 3,28,701 ஆசிரியர்கள் பதவி உயர்வு மற்றும் பணியைத் தொடர்வதற்கு TET தேவையால் பாதிக்கப்படலாம்.
- 2028 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதிக்குள் இந்த ஆசிரியர்கள் TET-இல் தேர்ச்சி பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- மத்திய அரசு சட்டப்பூர்வ நடவடிக்கை எடுத்து NCTE மூலம் அறிவிப்பை வெளியிட வேண்டும் என இத்தீர்மானம் வலியுறுத்துகிறது.




## தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்




- தமிழ்நாடு 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை' தொடங்க தயாராகி வருகிறது என்பதோடு இதன் கீழ் தகுதியான புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு 1 கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும்.

- அரசு சுகாதார நிறுவனங்களில் பிறந்த தகுதியான குழந்தைகளுக்கு இத்திட்டம் பொருந்தும், மேலும் 2026 ஆம் ஆண்டு ஜூன் 22 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த குழந்தைகளும் இதில் அடங்குவர்.
- இதன் மூலம் ஆண்டுதோறும் சுமார் 4.4 லட்சம் பிறந்த குழந்தைகள் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது, இதற்காக ஆண்டுக்கு சுமார் ₹755.83 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த மோதிரம் 1 கிராம் தங்கம் மற்றும் BIS ஹால்மார்க் செய்யப்பட்டதாக இருக்கும்; இத்திட்டம் பாலினம் அல்லது பிறப்பு அடிப்படையைப் பொருட்படுத்தாமல் தகுதியான பிறந்த குழந்தைகளை உள்ளடக்கியது.
- பாதுகாப்பான சேமிப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ள 107 விரிவான அவசர மகப்பேறியல் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான பராமரிப்பு (CEmONC) மையங்கள் மூலம் மோதிரங்கள் விநியோகிக்கப்படும்.

# தேசியச் செய்திகள்

## UPI-யின் 10 ஆண்டுகள் நிறைவு




- ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI) இந்தியாவில் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் 10 ஆண்டுகளை நிறைவு செய்தது.
- UPI ஆனது 2016 ஆம் ஆண்டில் இந்தியத் தேசிய கொடுப்பனவுக் கழகத்தால் (NPCI) தொடங்கப் பட்டது.
- ஆண்டு UPI பரிவர்த்தனைகள் 2016-17 ஆம் நிதியாண்டில் 1.78 கோடியிலிருந்து 2025-26 ஆம் நிதியாண்டில் 24,162 கோடிக்கும் மேலாக அதிகரித்துள்ளது, இது 13,000 மடங்கு உயர்வாகும்.
- பரிவர்த்தனை மதிப்பு ₹0.07 லட்சம் கோடியில் இருந்து சுமார் ₹314 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளதுடன் இது 4,000 மடங்குக்கும் அதிகமான வளர்ச்சியாகும்.

- தற்போது ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ், பூட்டான், இலங்கை, நேபாளம், சிங்கப்பூர், மொரிஷியஸ், கத்தார், கம்போடியா, கிரீஸ் மற்றும் மாலத்தீவு ஆகிய 11 நாடுகளில் UPI செயல்பட்டு வருகிறது.
- சர்வதேச நாணய நிதியம் (IMF) UPI-ஐ பரிவர்த்தனை அளவின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய நிகழ்நேர கட்டண அமைப்பாக அங்கீகரித்துள்ளது.

## இந்தியாவின் சூரிய ஒளி மின்னாற்றல் (PV) உற்பத்தித் திறன்




- இந்தியாவின் சூரிய ஒளி மின்னழுத்த (PV) தொகுதி உற்பத்தித் திறன் 100 GW-ஐ எட்டி உள்ளது, ஆனால் இது முக்கிய உதிரிபாகங்களுக்கு பெருமளவில் இறக்குமதியையே நம்பியுள்ளது.
- இந்தியாவின் தொகுதித் திறன் 2014 ஆம் ஆண்டில் 2.3 GW ஆக இருந்து 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் 100 GW ஆக உயர்ந்தது, அதே நேரத்தில் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மின்கலத்தின் திறன் 25 GW ஆகவும், வேஃபர் (wafer) திறன் சுமார் 2 GW ஆகவும் எட்டியது.
- பாலிசிலிகானுக்கு 100% நெருக்கமாகவும், வேஃபர்களுக்கு 90% க்கும் அதிகமாகவும், மின்கலங்களுக்கு 60% க்கும் அதிகமாகவும், தொகுதிகளுக்கு 40% க்கும் அதிகமாகவும் இந்தியாவின் இறக்குமதி சார்பு உள்ளது, இதில் சீனா முக்கிய ஆதாரமாக உள்ளது.
- உற்பத்தி இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டம், அங்கீகரிக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் பட்டியல் (ALMM) மற்றும் அடிப்படைச் சுங்க வரி (BCD) ஆகியவற்றின் மூலம் உள்நாட்டு உற்பத்தியை அரசு ஆதரிக்கிறது; PLI திட்டம் 48 GW ஒருங்கிணைந்த PV உற்பத்தி திறனை வழங்கியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி இந்தியா 106 GW நிறுவப்பட்ட சூரிய ஆற்றல் திறனைக் கொண்டிருந்தது என்ற நிலையில் மேலும் 2030 ஆம் ஆண்டிற்குள் அதன் 280 GW சூரிய இலக்கை அடைய சுமார் 174 GW-ஐ சேர்க்க வேண்டும்.

- இந்தியாவின் சூரிய ஒளி PV ஏற்றுமதி 2025 நிதியாண்டில் எட்டு மடங்கு அதிகரித்து 1.2 பில்லியன் டாலராக உயர்ந்தது, ஆனால் அதில் 97% அமெரிக்காவிற்குச் சென்றது, இது ஏற்றுமதிச் சந்தைகளை பன்முகப்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் காட்டுகிறது.

## 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பில் மாற்றங்கள்


- 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் முதன்முறையாக பிச்சைக் காரர்கள் மற்றும் நாடோடிகள் தனிப் பிரிவாகப் பதிவு செய்யப்பட மாட்டார்கள்.
- அதற்குப் பதிலாக அவர்கள் பொருளாதாரம் அல்லாத செயல்பாட்டுப் பிரிவில் "மற்றவர்கள்" என்பதன் கீழ் சேர்க்கப்படுவார்கள்.
- 2001 ஆம் ஆண்டில் 6.3 லட்சமாகவும், 1991 ஆம் ஆண்டில் 5.4 லட்சமாகவும் இருந்த நிலையில், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுமார் 3.8 லட்சம் பேர் மட்டுமே பிச்சைக்காரர்கள் அல்லது நாடோடிகளாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர்.
- 2027 மக்கள் தொகை கணக்கெடுப்பு இடம்பெயர்வுக்கு ஒரு காரணமாக இயற்கை பேரிடர்களையும் சேர்க்கும்.
- பெற்றோர்கள் ஒரே வீட்டில் பட்டியலிடப்படாத நிலையில் அல்லது உயிருடன் இல்லாத போது அவர்களின் பிறந்த தேதி, பிறந்த இடம் மற்றும் மதம் ஆகியவற்றை புதிய புலங்கள் சேகரிக்கும்.
- கிடைக்கும் இடங்களில் ஆதார், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் பாஸ்போர்ட் / கடவுச்சீட்டு எண்கள் போன்ற விவரங்களும் சேகரிக்கப்படலாம்.




## LPG குழாய் இணைப்பு வலையமைப்பு விரிவாக்கம்

- பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் (PNGRB) சுமார் ₹7,000 கோடி மதிப்பீட்டிலான சுமார் 1,800 கி.மீ LPG குழாய் இணைப்புகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- இக்குழாய் இணைப்புகள் தெலங்கானா, மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட், கர்நாடகா மற்றும் கோவா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கும்.
- அரசுக்கு சொந்தமான கெயில் (GAIL) இந்தியா நிறுவனம் இத்திட்டங்களை உருவாக்கும்.
- இத்திட்டங்களில் செர்லப்பள்ளி-நாக்பூர் (556 கிமீ), ஜான்சி-சிதர்கஞ்ச் (611 கிமீ), மற்றும் சிக்ராபூர்-கோவா & ஹூப்ளி (633 கிமீ) குழாய் இணைப்புகள் அடங்கும்.
- இத்திட்டங்கள் இந்தியாவின் LPG குழாய் இணைப்பு வலையமைப்பை சுமார் 7,700 கி.மீட்டரிலிருந்து 9,500 கி.மீட்டராக உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது, இது சுமார் 24% வளர்ச்சியாகும்.




# சர்வதேசச் செய்திகள்

## பொருளாதாரப் புறக்கணிப்பு நடவடிக்கை


- ஈரானின் நிதி மற்றும் வணிக வலையமைப்புகளை இலக்காகக் கொண்டு பொருளாதார ரீதியாக அதனைத் தனிமைப்படுத்துவதற்காக அமெரிக்கா "ஆபரேஷன் எகனாமிக் அவுட்காஸ்ட்" (பொருளாதாரப் புறக்கணிப்பு நடவடிக்கை) என்ற நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.
- ஈரானுடன் தொடர்புடைய டிஜிட்டல் சொத்துக்கள், தொழில்நுட்பம், தங்கம், விமானப் போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து ஆகியவற்றை அமெரிக்கா குறி வைக்கிறது.
- முதல் கட்டத்தில் 60 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் கப்பல்களுக்கு எதிரான தடைகள் அடங்கும்.
- ஈரானுடனான தடைசெய்யப்பட்ட பரிவர்த்தனைகளை எளிதாக்கும் வெளிநாட்டு வணிகங்கள் மற்றும் வங்கிகளுக்கு இரண்டாம் நிலைத் தடைகள் அபராதம் விதிக்கலாம்.

- 2025 ஆம் ஆண்டில் ஈரானின் 80% க்கும் அதிகமான கப்பல் வழி எண்ணெயை வாங்கியதால், சீனா இந்த பிரச்சாரத்தின் ஒரு முக்கிய சோதனையாக உள்ளது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### கேரளாவின் இரண்டாவது உள்நாட்டு மாட்டு இனம்




- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் தேசிய விலங்கு மரபணு வளப் பணியகம் (ICAR-NBAGR), பெரியார் குள்ளன் என்றும் அழைக்கப்படும் பெரியார் மாட்டை ஒரு உள்நாட்டு மாட்டு இனமாக அதிகாரப் பூர்வமாகப் பதிவு செய்துள்ளது.
- வெச்சூர் மாடு இந்தியாவின் மிகச்சிறிய மாட்டு இனங்களில் ஒன்றாகும் என்பதோடு மேலும் இது கேரளாவைப் பூர்வீகமாகக் கொண்டது.

- வெச்சூர் மாட்டுக்கு அடுத்தபடியாக தேசிய அங்கீகாரம் பெற்ற கேரளாவின் இரண்டாவது உள்நாட்டு மாட்டு இனம் பெரியார் மாட்டு இனமாகும்.
- பெரியார் குள்ளன் என்பது மத்திய கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலை வனப் பகுதிகள் மற்றும் தோட்டப் பகுதிகளைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான குள்ள மாட்டு இனமாகும்.
- இது முக்கியமாக எர்ணாகுளம் மற்றும் திருச்சூர் மாவட்டங்களில் காணப்படுகிறது என்பதோடு மேலும் உள்ளூரில் இது குட்டம்புழா மாடு மற்றும் அண்டுகண்ணி என்று அழைக்கப் படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★